செம்மண்

நிலம் 3 துகள் 134 வள்ளுவர் ஆண்டு 2052, 04 - 10 மாசி 2023 வாரமலர் பக்கங்கள் 13

# சித்தார்த்தரின் பலிடி...!




நாகராசா

புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் 2020ஆம் ஆண்டில் கூறிய கருத்து ஒன்றை யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்று அப்போது வெளியிட்டது. தமிழத் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக வாக்களிப்பது சிங்களப் பேரினவாதத்தைப் பலப்படுத்தி விடும் - என்பதாக அவரது அந்தக் கருத்து அமைந்தது. எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் களத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் குத்து விளக்குச் சின்னத்தில் தமது வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ளார் சித்தார்த்தன். 3 வருடங்களுக்கு முன்பு தான் வெளியிட்ட கருத்துடன் முரண்பட்டுச் சித்தார்த்தன் செயற்படுவதைப் பலரும் கண்டுகொள்ளவில்லை. அவர் சிங்களப் பேரினவாத்தைப் பலப்படுத்த முனைகிறார் என்பதாவே இதை அர்த்தப்படுத்திக் கொள்ளவேண்டியிருக்கிறது.

**பிரிவுகள், பிளவுகள்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி. ஆ.ர்.எல்.எவ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எனப் பல கட்சிகள் அங்கம் வகித்திருந்தபோதிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் கூட்டமைப்பிலிருந்து தேர்தலுக்கு முன்னரே வெளியேறியிருந்தன. கூட்ட மைப்பு எனும் கூட்டில் எஞ்சியிருந்த 3கட்சிகளில் புளொட், ரெலோ ஆகியன தற்போது வெளியேறியுள்ளன. இத்தகைய பிரிவுகளாலும் பிளவுகளாலும் கூட்டமைப்பு என்பதே இல்லாது போயுள்ளது.

# கூட்டமைப்புக்கு எதிராக வாக்களிப்பது சிங்களப் பேரினவாதத்தை பலப்படுத்திவிடும்!



எச்சரிக்கின்றார் சித்தார்த்தன்

**தமிழ் அரசின் சிதைவு**
தமிழ் அரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணி, சிறிதரன் அணி, மாவை அணி என 3 முக்கிய உடைவுகள் ஏற்பட்டு நடக்கவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் அவை களமிறங்கியிருக்கின்றன. தனித்துத் தீர்மானம் எடுக்கும் நிலையில் ஏனையவர்கள் இருப்பதால நான் இப்போதும் தமிழ் அரசுக் கட்சியில்தான் இருக்கிறேன் என்று கூறிக் கொள்ளும் அதன் தலைவர் மாவை சேனாதிராசாவின் நிலை "அவர் கிடந்தார்" என்பதாக இருக்கிறது.

**மக்கள் திண்டாட்டம்**
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உடைவால் இதுவரை வீடே கதியென்றிருந்தவர்கள் இப்போது வீடா...? குத்துவிளக்கா...? எனப் பிரிந்து கிடக்கிறார்கள். இதனால் யார் யாருடன் எந்தச் சின்னத்தில் போட்டியிடுகிறார்கள் என்பது மக்களுக்கு இன்னும் தெளிவாக இல்லை. தலைவர்கள் ஆளையாள் குற்றம் சாட்டிச் சேறுபூசும் வேலைத்திட்டங்களில் களமிறங்கியிருப்பதால் அரச சார்புக் கட்சிகளுக்கும் சுயேட்சைக் குழுக்களுக்கும் அது சாதகமாக அமைந்திருக்கிறது.
கிளிநொச்சியில் வீட்டுச் சின்னத்தில் சிறிதரனின் ஆதரவாளர்களும் சுயேட்சையாகச் சுமந்திரனின் ஆதரவாளர்களும் களமிறங்கியிருக்கின்றனர் என்கிற செய்திகளும் வெளியாகியுள்ளன. இதனால் சுமந்திரன் அரசு, சிறி அரசு எனக் கிளிநொச்சியில் தமிழ் அரசுக் கட்சி இரண்டாகலாம்.

**விக்கியின் நிலை**
கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்தில் 2013இல் களமிறங்கிய சி.வி விக்னேஸ்வரன் அந்தக் கட்சி ஆதரவாளர்களையும் கட்சிகளையும் பயன்படுத்தி முதலமைச்சராகிய பின் ஒரு புதுக்கட்சியை அமைத்து அதில் வாக்குக் கேட்டு நாடாளுமன்றத்துக்குச் சென்றுவிட்டார். இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டுச் சேர்வதாற்கு 3 நிபந்தனைகளை விதித்தார். அந்தக் கூட்டின் செயலராகத் தன்னை நியமிக்க வேண்டும், தனது கட்சிச் சின்னத்தல் ஏனைய கட்சிகள் இணைந்து தேர்தலில் நிற்க வேண்டும், முன்னாள் புலி உறுப்பினர்களை உள்வாங்கக் கூடாது ஆகியவையே அவை. அதற்கு ஏனைய கட்சிகள் ஒத்து வராத நிலையில் புலிகளின் மிக நெருக்கமான ஆதரவாளர் எனக் கருதப்படும் மணிவண்ணனைக் கூட்டுச் சேர்த்துத் தேர்தலில் களமிறங்கியிருக்கிறார்.
தந்போது தமிழ்த் தேசியக் கட்சிகளின் செயற்பாடு 2020இல் சித்தார்த்தன் கூறியதுபோல கூட்டமைப்புக்கு எதிராக வாக்களிப்பது என்பதாகவே இருக்கிறது. தமிழ்க் கட்சிகளைச் சிதைப்பதற்குச் சிங்கள ஆட்சியாளர்கள் முயற்சி செய்யத் தேவையில்லை என்ற நிலைக்குத் தமிழ் தேசியக் கட்சிகள் தாமாக முன்வந்து அதைச் செய்ய முற்பட்டிருக்கின்றன.

**2020இல் சித்தார்த்தன் கூறியதுபோல கூட்டமைப்புக்கு எதிராக வாக்களிப்பது என்பதாகவே இருக்கிறது. தமிழ்க் கட்சிகளைச் சிதைப்பதற்குச் சிங்கள ஆட்சியாளர்கள் முயற்சி செய்யத் தேவையில்லை என்ற நிலைக்குத் தமிழ் தேசியக் கட்சிகள் தாமாக முன்வந்து அதைச் செய்ய முற்பட்டிருக்கின்றன**

# வேலன் சுவாமியின் கிழக்கு நோக்கிய பேரணி...!

நியூட்டன்

தமிழ் மக்களின் தாயகக் கோட்பாடு மற்றும் அரசியல் தீர்வு ஆகிய விடயங்களை முன்னிறுத்தி ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், ஊர்வலங்கள், அறவழிப் போராட்டங்கள் எனப் பல்வேறு முயற்சிகள் ஆயுதப் போராட்டங்கள் ஆரம்பிக்க முன்னரும் 2009இல் ஆயுதப் போர் முடிவுக்குக் கொண்டு



வரப்பட்ட பின்னரும் நடந்தன. அவை அனைத்தும் அரசியல்வாதிகளின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இம்முறை வடக்கிலிருந்து கிழக்கு வரை மேற்கொள்ளப்பட்ட பேரணி காவியுடை தரித்த வேலன் சுவாமியின் தலைமையில் நடந்ததாகவே ஊடகங்களில் காட்டப்பட்டது. இந்திய ஊடகங்கள் இந்தப் பேரணிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தன. இந்துத்துவத் துறவி ஒருவரின் தலைமையில் இந்துக்களின் பேரணியாக இது காட்டப்பட்டிருக்கிறது.

### அரசியல்வாதிகள் பின் தள்ளப்பட்டனர்

சுதந்திர தினத்தைக் கறுப்புக் கொடிப் போராட்டமாக அறிவித்த தமிழ் அரசியல்வாதிகளும் வேலன் சுவாமியின் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். செல்வம் அடைக்கலநாதன், சிறிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சாணக்கியன், சுமந்திரன் என ஒரு சிலர் வடக்கிலும் கிழக்கிலுமாகத் தலை காட்டிய போதும் அவர்கள் இறுதிவரை போராட்டத்திலோ ஊர்வலத்திலோ கலந்து கொள்ளவில்லை. அதன் பின்னர் வேலன் சுவாமியே போராட்டத்தை முன்னெடுத்தார். அதை முடித்தும் வைத்தார். இதைவிடக் கட்சிகள் தமது ஆதரவாளர்களைப் பேருந்தில் ஏற்றிச் சென்று ஓரிடத்தில் இறக்கிக் கொடி பிடித்துச் சென்றதையும் அவ்வூர் மக்கள் அதைப் புதினம் பார்த்ததையும் காண முடிந்தது. தமக்கு மட்டும்தான் தாயகக் கோட்பாட்டு விடயத்தையும் ஒற்றையாட்சிக்கு அப்பால் சென்று தீர்வு காணும் உரித்தும் உண்டு என்ற பாணியில் நடந்துகொள்ளும் கஜேந்திரகுமார் அணியினர் வேலன் சுவாமியுடன் ஊர்வலம் செல்லவும் இல்லை. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போராட்டத்தில் இணையவும் இல்லை.

### யாருடைய செலவு

வேலன் சுவாமி ஒரு துறவி. அவரிடம் பேரணி நடந்துவதற்கான பணமோ வாகன வசதியோ இல்லை. அதேவேளை இந்த முன்னெடுப்பில் வேலன் சுவாமிகளுடன் இணைந்து நின்ற பல்கலைக்கழக மாணவர்களிடமும் வசதி வாய்ப்புகள் இருக்கவில்லை. நான்கு நாள் நடந்த இந்தப் பேரணியில் அதிக பேருந்துகள், சிறிய வாகனங்கள், நூற்றுக்கணக்கான மோட்டார் சைக்கிள்கள் எனப் பல கலந்துகொண்டன.

தற்போது தமிழ்த் தேசியம், ஆர்ப்பாட்டம் என இறங்கினாலும் பல்கலையிலிருந்து வெளியேறிய பின்னர் பல்கலை மாணவர்கள் அரசின் வேலைவாய்ப்பையே எதிர்பார்க்கின்றனர். இதனால் அரச சார்புக் கட்சிகளையும் அரசியல்வாதிகளையும் நாடுகின்றனர். சிலர் வெளிநாடு செல்வதை இலட்சியமாகக் கொண்டிருப்பதால் இவற்றில் ஈடுபட்டதற்கான ஆதரத் தேவை நிமித்தம் இதில் இறங்கி எமது நிலம் எமக்கு வேண்டும் என்கின்றனர். அரசுக்கு எதிரான இவ்வறான ஆர்பட்டங்களில கலந்துகொண்டு பிடிக்கப்படும் ஒளிப் படங்களை வெளிநாடுகளில் தஞ்சம் கோருவதற்குப் பயன்படுத்துகின்றனர்.

வாகனங்களுக்கான செலவு,

சமையல்
சமையல்



# கிழங்குத் துவையல்...!

பனங்கிழங்கை அவித்துச் சுவைக்கும் பழங்கத்துடன்கூடவே அதைத் துவைத்து உண்ணும் பழக்கமும் நம்மவர்களிடம் உண்டு. அவித்த பனங்கிழங்கைத் தும்பு இல்லாமல் துப்புர வாக்கி இனிப்பாகவும், உறைப்பாகவும் என இரண்டு சுவைக ளில் துவைத்து உண்கிறார்கள். பனங்கிழங்கைத் தனியே அவித் துண்பதைவிடவும் இவ்வாறு துவைத்து உண்ணும்போது சுவை அதிகமாக இருக்கும். அவித்த கிழங்குகளுடன் இனிப்பு, உறைப் புச் சுவைகள் தரும் சில சேர்மானங்களைச் சேர்த்து இடித்துப் குழையல்கள்போலாக்கி உண்கிறார்கள். இப்போது பனங்கிழங்குப் பருவகாலம் என்பதால் இத்தகைய ருசி மிகு கிழங்குத் துவை யலை எவ்வாறு செய்வது என்று பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

அவித்த பனங்கிழங்குகள் - 20
சீனி - 100 கிராம்
தேங்காய்ப்பூ - பாதித் தேங்காயிலிருந்து பெறப்பட்டது.
பச்சை மிளகாய்கள் - 5

கிழங்குத் துவையலை முதலில் இனிப்புச் சுவையு டன் செய்வதற்கு அவித்த கிழங்குகளைத் தும்பு நீக்கிச் சிறிய துண்டுக ளாக ஒடித்து உரலில் இட்டு அதனுடன் சீனி மற்றும் தேங்காய்ப்பூ ஆகியவற்றைச் சேர்த்து இடித்துக் கொள்ள வேண்டும். இடித்த பின்னர் உருண்டைக ளாக்கி உண்ணலாம்.



இனிப்புச் சுவையைவிட உறைப்பாகவும் கிழங்குத் துவையலைச் செய்து சுவைக்கலாம்.
கிழங்குகளை ஒடித்து உரலில் இட்டபின்னர் பச்சை மியகாய்கள், தேங்காய்ப்பூ சேர்த்து இடித்து உருண்டைகளாக்கினால் உறைப்பான கிழங்குத் துவையல் கிடைக்கும். சிலர் ஒன்றிரண்டு மிளகு மற்றும் சிறிதளவு சீரகம் சேர்த்தும் இடிப்பது வழக்கம்.

எரிபொருள், உணவு, தங்குமிட வசதிகள் என எல்லாவற்றுக்கும் பல லட்சங்கள் செலவிடப்பட்டன. இதில் இந்தியாவின் பங்கு இருக்கிறது என்றும் தனி ஒரு வேலன் சுவாமிக்கு இத்தகைய துணிவும் தேவையும் இருக்கவில்லை என்றும் மக்கள் மத்தியில் கருத்துகளுள்ளன.

தமிழ் மக்கள் வேலன் சுவாமியைத் தலைவராக ஏற்கவும் இல்லை அவரின் கைகளில் தம்மையும் தமது நிலத்தையும் அரசியலையும் ஒப்படைக்கவுமில்லை. வடக்குக் கிழக்கில் இந்தியாவை மீறி எதுவும் சீனா செய்து விட முடியாது என்பதையும் ப.ஜ.காவின் இந்துத்துவக் கொள்கையே வடக்குக் கிழக்கில் ஆழ வேரூன்றியிருக்கிறது என்பதையுமே கறுப்புக் கொடிப் போராட்டம் இறுதியில் காவியுடைப் போராட்டமாக மாறியது காட்டுகிறது.

**புலம்பெயர் தமிழர்களின் நிலைப்பாடு**

வேலன் சுவாமியிடம் தமிழ் மக்களின் அரசியலை ஒருபோதும் கையளிப்பதற் குப் புலம்பெயர் மக்கள் விரும்பமாட் டர்கள். அதற்காகப் பணம் செலவிடவும் தயாரக இருக்கமாட்டார்கள். பல்கலைக் கழக மாணவர்களுடகப் போரணி ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருந்தபோது போராட்டம் பல்கலை மாணவர்களின் கையிலிருந்து எவ்வாறு பறிக்கப்ப டடது...? கறுப்புக் கொடி எவ்வாறு காவி யுடையாக மாறியது...? என்பதெல்லாம் கேள்விக்குரியவை.

கிழக்கு நோக்கிய இந்தத் தமிழர் எழுச்சியானது ஏற்கனவே நடத்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டங்களுடன் ஒப்பி டும்போது அரசியல்வாதிகள் ஓரங்கட்டப் பட்டு இந்துத்துவத் துறவி ஒருவரின் பேரணியாக மாற்றம் பெற்றது தெரிகிறது. பரந்தனில் வேலன் சுவாமிகள் உரையாற் றிய பின் முல்லைத்தீவு நோக்கிப் பேரணி நகர்ந்தபோது நூற்றுக்கணக் கானோர் மோட்டார் சைக்கிள்களில் அட்டகாசமாக பேரணி செல்வதைக் காணமுடிந்தது. இது வேலன் சுவாமியும் பௌத்த பிக்கு களைப்போல வன்முறையில் இறங்கியுள் ளார் என்ற விம்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

வேலன் சுவாமியும் பல்கலை மாணவர்களும் தமிழரின் பிரச்சினைக் காக களமிறங்கியிருக்கின்ற நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இனித் தேவையில்லை என்பதையே காட்டுகி றது.

கதிரேசன் காத்தவராயன்



# காசுக்குத்தானே எல்லாமோ?

அண்டைக்கதிலை வாசிசாலையடிக்குப் போயிருந்தன். சுப்பண்ணை, மயிலர், கனகர், முருகேசர் தம்பர் எண்டு அண்டைக்கு வலு பலமாய் இருந்துது. நானும் போயிருந்துகொண்டன். 'என்னண்ணை புதினங்கள்?' எண்டார் மயிலர் ஒரு எதிர்பாப்போடை. 'கனக்கக் கிடக்குது ஆனாலென்ன வில்லண்டம் பிடிச்ச கதையள்...' எண்டன் சிரிச்சினம்.

'இப்ப எதுதான் வில்லண்டமில்லாமல் இருக்குது? ஏதோ ஒரு பக்கமான பிரச்சனையளல்லே?' எண்ட முருகேசர் ஆராவது ஏதாலும் கேக்க வேணும் எண்டமாதிரி நிப்பாட்டினார். 'என்ன முருகேசண்ணை எனக்கெண்டால் அப்பிடித் தெரியேல்லையே?' எண்டார் தம்பர். 'தம்பா... வில்லங்கமில்லாத ஏதாலுமொண்டைச் சொல்லுபாப்பம்' எண்டார் மயிலர் ஒரு சிரிப்போடு.

'உண்மைதான்... ஆனால் பாருங்கோவன் உவர் சீனியற்றை செத்தவீட்டைப் பாத்தனீங்களே? ஒரு பிரச்சனையுமில்லாமல் சிமூத்தாயல்லே நடந்துது?' எண்டார் சுப்பண்ணை. 'அதெண்டால் மெய்தான்... தோரணம் வாழையிலை தொடங்கி ஐயர் பாட்டு விறகு மேளம் எண்டு கடமை செய்தது அரப்பெலுமிச்சங்காய் வைச்சது தவிர கொங்றாக்ட்காறர்தானே செய்தவங்கள்?' எண்டார் கனகர். 'நெல்லுப்பொரி எறிஞ்சதும் அவங்கள்தானே...?' எண்டு சேந்தார் தம்பர்.

'காசுதான்...பிள்ளைப்பெத்துத் தொடக்கம் திவசம் வரைக்கும் எல்லாம் நடக்கும்...ஒரு போனும் காசும் இருந்தால் சரியெண்டநிலைதான்... சொந்தபந்தம் ஊர் உறவு எண்டு ஒண்டும் தேவையில்லை...இதுகும் ஒரு வாழ்க்கை?' எண்டு நான் சலிச்சதுக்கு 'ஏன் கதிரேசண்ணை பிள்ளையை உருவாக்கிறதும் காசுக்கல்லே நடக்குது? அதைத் தவற விட்டிட்டியள்' எண்டு சிரிச்சார் முருகேசர்.

'இப்ப கொஞ்சம் பொறுங்கோவன் கோயிலுகள் திருவிழரவுகள் தொடங்கப் போகுதல்லே? பாருங்கோவன் காசு செய்யப்போற வேலையளை...' எண்டார் மயிலர். ' சாமியும் வேண்டாம் உபயகாறரும் வேண்டாம் காசு... காசிருந்தால் திருவிழா சங்கையாய் நடந்திடும்' எண்டார் கனகர் எரிச்சலோடை. 'நீங்கள் உதுகளோடை நிண்டிட்டியள்... எலக்சன் கூத்துகளிலை பாருங்கோவன்...' எண்டு நான் சொல்ல சிரிச்சினம்.

'பேப்பருக்குத் தட்டுப்பாடு.. அச்சடிக்கிறது சிலவு எண்டு புலம்புறவை ஒருபக்கம்... தேதி தெரியாத எலெக்சனுக்கு இப்பவே மதிலுகளை நாறடிக்கத் தொடங்கிவிட்டாங்கள்...' எண்டு சுப்பண்ணை எரிச்சலோடை சொன்னார். 'அது பாருங்கோ எந்தப் புத்துக்கை எந்தெந்தப் பாம்புகள் எண்டு சனம் விளங்க வேணுமெண்ட மாதிரியல்லே கிடக்குது?' எண்டு சிரிச்சார் மயிலர்.

'எனக்கொரு ஆசை உந்த நோட்டீசுகளை எடுத்து வைச்சிருக்க வேணுமெண்டது... அடுத்த எலெக்சனிலை ஆரார் எங்கையெங்கை எண்டு பாக்க வசதியாயிருக்கும். தோழிலை கைபோடேக்கை சொன்னதையும் கொலரிலை பிடிபடக்குள்ள திட்டுறதுகளையும் றெக்கோட் பண்ணினாலும் நல்லதுதான்...படத்துக்கு வசனமெழுத உதவியாயிருக்குமல்லோ?' எண்டு சிரிச்சார் முருகேசர்.

'அப்பிடியெண்டால் பேப்பர் கட்டிங்குகளை நான் சேர்க்கிறன்... சனத்தை நம்பவைக்கிற ஏமாத்திற வித்தையளை அதுகளை வைச்சுச் செய்யலாமல்லே... நான் அசிஸ்ரன்ற்றா உன்னோடை வாறன்' எண்டு நான் சொல்ல பெரிய சத்தமாச் சிரிச்சினம். 'பேப்பர்க் கட்டிங் என்ன கட்டிங்... பேப்பராயே சேத்து வையுங்கோ கதிரேசண்ணை...அதகளுக்குள்ளைதான் நிறையப் பம்மாத்துகள் கிடக்குதுகள்' எண்டார் முருகேசர்.

'ஓமண்ணை அதுதான்... அண்டைக்குப் பாத்தியளே தேசியம் பேசுகிற யாழ்ப்பாணப் பேப்பரிலை முதல்பக்க சுதந்திரதின கொண்டாட்டம்... தமிழரின் தனித்துவ நாளிதழாம்?' எண்டார் கனகர்.'அது விளம்பரமல்லே?' எண்டார் தம்பர். 'எழுக தமிழ் எண்டுசனம் அமர்க்களப்பட்ட அண்டைக்கு முதற் பக்கத்திலை கடைசிச் சனி தவறாமல் எள்ளெண்ணை எரியுங்கோ எண்டு போட்ட பேப்பரல்லே...' எண்டார் முருகேசர்.

'இஞ்சார் காசிருந்தால் எல்லாம் பண்ணலாமெண்டியள்.... அதுதான் உதுகும்...வில்லண்டங்கள்தான் எல்லாம் எண்டது உதுகளையும் சேத்துத்தான்...வரட்டே' எண்டு கொண்டு வந்திட்டன்.



95

சிறைக்குள்...

# ஒரு வகை விபச்சாரம்

தர்மராசா


**25.2.2002**அன்று திருகோணமலைச் சிறைச் சாலையிலிருந்து அனுராதபுரச் சிறைச்சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டேன். மாலை 6மணிக்கு அனுராதபுரம் சிறையை அடைந்தேன். சிறைப் பேருந்துக்குள்ளேயே எமது பைகளை வைத்து விட்டு துவாய், தூரிகை ஆகியவற்றை எடுத்துக்கொண்டு உள்ளே போனோம். உள்ளே சென்று கைதிகளைப் பதிவு செய்யும் இடத்தில் நின்றோம். அன்றைய தினம் சிங்களப் பெண்கள் நால்வர் விபச்சாரக் குற்றம் சாட்டப்பட்டு உள்ளே கொண்டு வரப்பட்டார்கள். அந்தப் பெண்களிடம் சக கைதிகளும் சிறை ஊழியர்களும் நடந்து கொண்ட விதம் ஒரு வகை விபச்சாரமாகவே இருந்தது.

நாம் ஈ-2 வாட்டுக்குப் போனபோது 27 தமிழ் அரசியல் கைதிகள் மாத்திரமே இருந்தார்கள். ஏனையோர் விடுதலை, பிணை என வெளியே சென்றுவிட்டார்கள். அப்போது அனுராதபுரச் சிறையில் இருந்தவர்களில் பெரும்பாலான கைதிகள் மன்னார் நீதவான் நீதிமன்றத்துக்குப் போய் வருபவர்களாக இருந்தார்கள். அவர்கள் சென்றுவரும் ஒவ்வொரு தடவையும் 14 நாள்கள் தவணை போடப்படுவது வழக்கமாக இருந்ததது. அதனால் களுத்துறை, பூசா, கொழும்புச் சிறைகளுக்கு அனுப்பப்படாது அனுராதபுரச் சிறையிலேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்;. இன்னும் சிலர் திருகோணமலை நீதிமன்றத்துக்குப் போய்வருவோராக இருந்தனர்.

நாம் சிறைச்சாலைக்குள் போனாலும் சிறைக் குசினிக்குள் போய் உணவு எடுக்கவில்லை. உள்ளே சென்றதும் அங்கிருந்த முன்பு பழக்கமான நண்பர்களுடன் சேர்ந்து கிடைத்ததைச் சாப்பிட்டோம் (கைதிகளுக்கு மாலை உணவு வழங்கிய பின்னர் எஞ்சியுள்ள உணவு குசினிக்குள் வைக்கப்பட்டிருந்தாலும் அது ஒழுங்காக மூடப்படாதால் அதிகம் இலையான்கள் மொய்த்துக்கொண்டிருக்கும். அதை உண்பதைவிட பட்டினியாக இருப்பது ஆரோக்கியமானது). எனக்கு முன்பு பூசாவில் அறிமுகமான புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சந்திரன் என்ற நண்பர் பாட்டிக்காரரிடம் காசு குடுத்து வாங்கி வைத்திருந்த கோழி இறைச்சியையும் பாணையும் எனக்குத் தந்தார். படுப்பதற்குச் சிறு தலையணையும் தந்தார். பலர் அங்கிருந்து விடுதலையாகிவிட்டதால் தலையணைகள் எல்லாம் மேலதிகமாகக் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்ததைக் கண்டேன்.

வேறு சிறைகளில் இருந்து ஸ்கொட்டில் கைதிகள் வந்து சேர்ந்தால் வருகிறவர்களில் புகைப் பழக்கம் உள்ளவர்களும் அனுராதபுரச் சிறையில் இருந்த புகைப் பழக்கமுள்ளவர்களும் உடனடியாக இணைந்து விடுவார்கள். பிளாஸ்ரிக் தேநீர்க்

# நீங்கள் எவ்வகை "இன்ரெலியன்ஸ்"...?



தமிழ்மொழி மிகவும் இனிமையானது. மனிதனின் அறிவாற்றலை மதிநுட்பம் என்ற சொல்லால் விளக்குகின்றது. மதி என்றால் சந்திரன். நுட்பம் என்றால் திறனாற்றல் என்று பொருள்படின் மதிநுட்பம் என்பது சந்திர ஒளிபோல் தட்பமாக இன்பத்தைத்தரும் ஆற்ற லாகவும் அந்த ஒளி தினமும் மாறுபட்டுக் கொண்டிருப்பதுபோல் மனிதனின் மதிநுட்பமும் மாறிக் கொண்டேயிருக்கிறது. மனிதனின் மதிநுட்பத்தை ஆய்வாளர்கள் ஒன்பது வகைகளாகப் பிரித்துள்ளனர்.

இன்றைய அதிநவீன தொழில்நுட்ப யுகத்தில் தனி மனித தொடர்பாடல், சமூகத் தொடர்பாடல், ஒழுக்க விழுமியங்கள் என்பனவற்றுக்கு மனித மதிநுட்பத்தின் பன்முக நோக்கு மிகவும் அவசியமானது. அவற்றின் சாரங்களை ஆய்ந்தறிவதனால் எமது சமூகம் மேன்நிலை அடையும். சிறந்த ஆற்றலுள்ள எதிர்காலச் சந்ததியினரை உருவாக்க முடியும்.

மருத்துவர்
சி. யமுனாநந்தா

எல்லா மனிதர்களதும் மூளையின் கட்டமைப்பு ஒரே மாதிரியானவை. மனிதனின் உணர்வுகள், அனுபவங்கள் மூளையின் பல்வேறு பகுதிகளுடன் இணைந்து விழிநிலைகளை ஏற்படுத்துகின்றன. இதில் தற்போது 9வகையான நுட்பங்கள் இனம் காணப்பட்டுள்ளன.

**1. இயற்கையுடன் இயைந்த மதிநுட்பம்** (Naturalistic intelligence)

இயற்கையைப் பாகுபடுத்தி அறியும் ஆற்றல். ஆதி மனிதன் இயற்கையை அறிந்து உணவைச் சேகரித்தான், வேட்டையாடினான், விவசாயம் செய்தான். சூழல் நேயத்தைப் பேண தற்போது இயற்கை பற்றிய மதிநுட் பம் மிகவும் தேவை. தாவரங்களைப் பாதுகாத்தல், இய ற்கை வளங்களைப் பாதுகாத்தல், பசுமை இயக்கங்கள் ஆகியன இத்தகைய மதிநுட்பத்திற்கு உட்பட்டவை.

**2. சங்கீத மதிநுட்பம்** (Musical intelligence)

இசையை உணர்ந்து அதனுடன் இணையும் திறமை. இத்திறமை உடையோர் கணித மதிநுட்பத்துடனும் திறமையுள்ளவர்களாக இருப்பர்.

கோப்பை, சிறிய பெட்டி ஒன்றை நடுவில் வைத்துவிட்டு வட்டமாக இருந்து பீடி, சிகரெட் புகைத்துச் சாம்பலை அதற்குள் கொட்டிக் கொட்டிச் சுவாரசியமாகப் புகைத்தவாறு கதைப்பார்கள். அவர்களைச் சுற்றிப் புகை மண்டலமாக இருக்கும். அது அவர்களின் தனி உலகம். அதைத் தூரத்திலிருந்து ரசிப்பதும் ஒரு பொழுது போக்குத்தான்.

பீடி புகைக்கின்ற இளம் வயதுக்காரர் பலர் தாழ்வுச் சிக்கல் உள்ளவர்களாக இருப்பர். அவர்களின் கழுத்து, முகம், கண் மடல்கள் எல்லாம் எப்போதும் காய்ந்திருக்கும். வியர்வை மணம் அதிகம் இருக்கும். பொதுவாகவே எதற்கெடுத்தாலும் கோபப்படுவர். விரக்தியும் நரம்புத் தளர்ச்சியும் தனித்து விடப்பட்டுவிட்டோம் என்ற எண்ணமுமே இதற்குப் பிரதான காரணம். இதைவிட புகைக்காத சகதிகளைப் பார்க்கும்போது ஏற்படுகின்ற பொறாமை உணர்வும் காரணமாக இருக்கலாம். தாம் சீரழிந்த நிலையில் இருக்கும்போது மற்றவர்கள் திடகாத்திரமாகவும் அழகாகவும் படிப்பு, விளையாட்டு ஆகிய செயல்களில் ஈடுபட்டு மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் நம்பிக்கையுடனும் இருப்பது அவர்களுக்குப் பிரச்சினை ஏற்படுத்துகிறது. தாழ்வுச் சிக்கலை ஏற்படுத்துகிறது. தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்காகக் குதர்க்கமான முறைகளில் சண்டை பிடிப்பர். இவர்களில் பலர் வாசIனைப் பவுடர்களையும் வாசனைக் கிறீம்களையும் பூசிக் கொள்வர். ஆனால் அவர்களுடன் நிரந்தமாக ஒட்டியிருக்கும் புகை மணம் மேற்படி வாசனைகளுடன் கலந்து வியர்வையும் சேர்ந்து சகிக்க முடியாத துர் நாற்றத்தை ஏற்படுத்தும். எப்படியோ அவர்களும் தமக்கென ஓர் உலகத்தை உருவாக்கி வைத்திருக்கிறார்கள் என்ற வகையில் ஏனையவர்கள் சகித்துக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)




**3. தர்க்க கணித மதிநுட்பம்** (Mathematical intelligence)

கணிதத்திறன், வாதிடும் திறன் என்பனவற்றுடன் தொடர்புடைய நுட்பம் இது.

**4. ஆத்மாத்த மதிநுட்பம்** (Existential intelligence)

ஆழ்ந்த சிந்தனைகள், வாழ்க்கையின் அர்த்தங்கள், மனித வியாபகங்கள், இறப்பு என்பவை பற்றிய அறி



வாற்றல் ஒருவருக்கு ஏற்படும் தெய்வீக உணர்வு அவரின் அனுபவத்தால் ஏற்படுவது. இது இயற்கையாகத் தியானம் செய்தல், புலன்களை அடக்குதல், சில பதார்த்தங்களின் பாவனை, மந்திர ஓசை, இசை என்பன மூலம் இந்த மெய்மறநிலையை அடையலாம்.

**5. உறவு மதிநுட்பம்** (Interpersonal intelligence)

மற்றவர்களைப் புரிந்து கொண்டு அவர்களுடன் உறவாடும் திறமை. இதில் மற்றையவர்களின் உணர்வுகளை அறிந்து செயற்படும் ஆற்றல் இருக்கும். ஆசிரியர்கள், சமூக சேவையாளர்கள், நடிகர்கள், அரசியல்வாதிகளிடத்தே இத்திறமை காணப்படும்.

**6. உடல் அசைவியக்க மதிநுட்பம்** (Bodily Kinesthetic intelligence)

மனதையும், உடலையும் இணைத்துச் செயற்படும் ஆற்றல். விளையாட்டு வீரர்கள், நாட்டியக்காரர்கள், சத்திர சிகிச்சை நிபுணர்கள் இத்திறமை மிக்கவர்களாக இருப்பர்.

**7. மொழியாற்றல் மதிநுட்பம்** (Linguistic intelligence)

மொழியாற்றல் மதிநுட்பம் எழுதுதல், வாசித்தல், கதை கூறுதல் என்பவற்றுடன் தொடர்புடையது. மொழியாற்றல் மதிநுட்பம் மிக்கோர் கவிஞர்கள், நாடக ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள் ஆக விளங்குவர்.

**8. மற்றையவர்கள் புரியும் மதிநுட்பம்** (Interpersonal intelligence)

இன்னொருவரின் எண்ணங்கள், உணர்வுகள் என்பவற்றைப் புரிந்து அதனைப் பயன்படுத்தும் ஆற்றல். உளவியலாளர்கள், ஆன்மீகத் தலைவர்கள், தத்துவ ஞானிகள் இத்தகையவர்கள்.

**9. பரிமாண மதிநுட்பம்** (Spatial intelligence)


முப்பரிமாணத்தில் சிந்திக்கும் திறமை, மனதில் கற்பனை உருக்களை உருவாக்கக்கூடியவர்கள். வரைபுகள், சித்திரம், சிற்பம் என்பவற்றில் வல்லமை மிக்கவர்களாக இவர்கள் இருப்பர். மாலுமிகள், விமானிகள், சிற்பிகள், ஓவியர்கள், கட்டடக் கலைஞர்கள் இத்தகைய திறமைசாலிகள். பரிமாண மதிநுட்பம் மிக்க விஞ்ஞானமாக (Topological Science) பரிமாண சிந்தனை விருத்தியடைந்துள்ளது.

ஒருவரின் மதிநுட்பம் அவர்களின் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. மேற்கூறிய ஒன்பது வகையான மதிநுட்பமும் அனைவரிலும் குறித்த அளவில் காணப்படும். அதன் தண்ணொளி பௌர்ணமிபோல் பிரகாசிக்கலாம். அன்றேல் சேற்றில் உள்ள இரத்தினக் கற்போல் மறைந்தும் இருக்கலாம். பொன்னைப் புடம் போடுவதுபோல் மனித மனதையும் தினமும் புடம்போடுதல் அவசியம்.



# இணைப்பாட்சி என்கிற சமஷ்டி!

11




மு.திருநாவுக்கரசு

"சமஷ்டியா தனிநாடா" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் நவீன வரலாற்றுத்துறை விரிவுரையாளரான மு.திருநாவுக்கரசு அவர்களால் எழுதப்பட்ட நூல் இன்றைய காலகட்ட விவாதங்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும். 2004ஆம் ஆண்டு வெளியாகிய இந்த நூல் சமஷ்டி - தோற்றமும் வளர்ச்சியும், சமஷ்டி - ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும், பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும், சமஷ்டி யாப்புகள் - அமெரிக்க சுவிஸ் அனுபவங்கள், இலங்கையில் சமஷ்டிக் கொள்கை ஆகிய அத்தியாயங்களை உள்ளடக்கியிருக்கிறது. 234 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் 2009ஆம் ஆண்டு அறிவு அமுது பதிப் பகத்தால் கிளிநொச் சியில் வெளியிடப் பட்டது. தீர்வு பற்றிய பேச்சுக்கள், கலந்து ரையாடல்கள் இடம் பெறும் இந்தக் காலத்தில் அதன் ஐந்தாம் அத்தி யாயத்தைச் செம்மண் ணில் வாசிக்கத் தருகிறோம்.

இத்தகைய தர்க்கப்போக்கு 1965ஆம் ஆண்டு டட்லி-செல்வா ஒப்பந்தத் திலும் காட்சி மாற்றத்துடன் இடம்பெற்றது. 1965ஆம் ஆண்டு கைச்சாத்தான டட்லி-செல்வா ஒப்பந்தத்தின் கீழான மாவட்ட சபைகள் அமைத்தல் என்பது சமஷ்டிக் கோட்பாட்டை முற்றிலும் கிண்டலுக்கும் கேலிக்கும் உள் ளாக்கும் ஒன்றாகும். ஒருபோதும் பதில் சொல்லமுடியாத ஒரு பெரும் வர லாற்றுத் தவறை இவ்வொப்பந்தத்தின் வாயிலாகத் தமிழ் அரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு இழைத்துள்ளது. 1965ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல்கள் மூலம் அறுதிப் பெரும்பான்மையை ஈட்;ட முனைந்தது. அவ்வாறு தமிழ் அரசுக் கட்சியுடன் கூட்டுச்சேர்வதற்கு டட்லி-செல்வா ஒப்பந்தம் அவசியப் பட்டது. கதிரையைப் பிடிப்பதற்காகத்தான் தமிழ் அரசுக் கட்சியின் பக்கம் ஐ.தே.காவினர் திரும்பினார்களே தவிர உரிமைக்காக அல்ல. கதிரையைப் பிடிக்கப் பண்டாரநாயக்கா செய்த அதே ஒப்பந்த உத்தியைப் பின்பற்றிய டட்லி பின்பு கதிரையைக் காக்க அதே ஒப்பந்த மீறல் உத்தியையும் பின் பற்றினார். இங்கு சிங்களக் கட்சிகளுக்கு அரசை அமைக்க அறுதிப் பெரும் பான்மை கிடைக்காமைதான் தமிழ் அரசுக் கட்சிக்குக் கிடைத்த பலமாயி ருந்தது. ஆனால், அத்தகைய பேரம் பேசவல்ல பலத்தைக் கையாள்வதில் தமிழ் அரசுக் கட்சி சிறிதும் வெற்றிபெறாமல் எதிரிக்கு உதவிவிட்டு வெறுங் கையுடன் திரும்பியது.

வெறுங்கையுடன் திரும்பிய தமிழ் அரசுக் கட்சி பின்பு 1970ஆம் ஆண் டுப் பொதுத் தேர்தலில் "அரசாங்கத்தை ஆக்கவும் அழிக்கவும்" தங்களால்

முடியும் என்றொரு தேர்தற் கோசத்தை முன்வைத்தது. ஆனால், அக் கோசத்துக்கு முற்றிலும் எதிர்மாறாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி 2/3 பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்கு வந்தது. பின்பு 1977ஆண்டுப் பொதுத் தேர்தலில் ஐ.தே.க. 3/4பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்கு வந்தது. இத்தகைய பெரும்பான்மைப் பலத்தின் கீழ் முதலில் தமிழ் அரசுக் கட்சியும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியும் கதியற்று அரசியல் அநாதைகளாயின. இப் பின்னணியில் மேடை அரசியல் முடிவுக்கு வந்து தலைமறைவரசியல் தலைதூக்கியது. தனிச் சிங்களச் சட்டம் உருவாக இருப்பதை எதிர் நோக்கி 1956ஆம் ஆண்டு பொதுத் தேர்தற் சூழலில் தனிநாட்டுக் கோரிக்கை எழத் தொடங்கியது. 1957ஆம் ஆண்டு தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து திரு.ஆ.தியாகராசாH (பின்பு கலாநிதி) ஒரு சிறு நூல் எழுதினார். 1961ஆம் ஆண்டு இவ்வாறு தனிநாட்டுக் கோரிக்கையின் பொருட்டு 1967ஆம் ஆண்டு "தமிழர் சுயாட்சிக் கழகம்" எனும் அமைப்பு உதயமானது. இதன் பின்பு 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் பிரிந்து செல்வதற்கான கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்து அதன்பேரால் 1977ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் பெரு வெற்றியும் ஈட்டியது.

(தொடரும்)

# “பாரபட்சம் காட்டமாட்டார்கள் ஆனால் நெருங்கிப் பழக மாட்டார்கள்“

மொழியாக்கம்
கமலநாதன்

என்னைப்போன்று இன்னோர் சிப்பாயும் காயங்களுடன் புலிகளிடம் பிடிபட்டிருந்தார். எங்கள் இருவரது கண்களையும் கட்டி முதலில் ரக்ரர் ஒன்றில் ஏற்றினார்கள். ஓரிடத்தில் இறக்கிப் பின்னர் ஜீப்பில் ஏற்றினார்கள். அதன் பின்னர் வேறொரு இடத்தில் இறக்கி லொறி ஒன்றுக்கு மாற்றினார்கள். லொறியில் கொண்டு சென்று கிளிநொச்சிப் பிரதேசத்தில் இறக்கினார்கள். அங்கு எனக்குச் சேர்ட்டும் சாரமும் தந்தார்கள். அன்றிரவு நாமிருந்த இடத்துக்கு அதிக மக்கள் வந்து எங்களைச் சூழ நிற்பதை அவர்களின் ஆரவாரங்களை வைத்து அறிய முடிந்தது. கண்கள் கட்டப்பட்ட நிலையில் இருந்ததால் அங்கு வந்தவர்களைப் பார்க்க முடியவில்லை.

**நல்லூரில் கண்காட்சி**

காயப்பட்டுப் பிடிபட்டிருந்த எங்கள் இருவரையும், அந்தப் போரில் கொல்லப்பட்ட சிப்பாய்களின் சடலங்களையும், அந்தத் தாக்குதலின்போது தாம் கைப்பற்றிய ஆயுதங்களையும் யாழ்ப்பாணம் - நல்லூர்ப் பகுதியில் புலிகள் கண்காட்சிக்கு வைத்தார்கள். பெருந்தொகை மக்கள் வந்து அதைப் பார்த்தார்கள்.

அன்று மாலையில் எங்கள் இருவரையும் யாழ்ப்பாண மருத்துவமனையில் சேர்த்தார்கள். அப்போது அந்த மருத்துவமனை நிர்வாகம் கிட்டத்தட்டப் புலிகளாலேயே நடத்தப்பட்டது. எனக்கு அறுவைச் சிகிச்சை அளிக்கப்பட்டுக் காலில் கட்டுப் போட்டார்கள். மற்றவருக்கு மருந்து கட்டிக் குருதி ஏற்றினார்கள். அதன் பின்னர் எங்கள் இருவரையும் கிராமம் ஒன்றுக்குக் கொண்டு சென்று அங்கிருந்த ஆளில்லாத வீடு ஒன்றில் தங்க வைத்திருந்தார்கள். எங்களுக்குக் கை விலங்கு போடவில்லை. அந்த வீட்டின் யன்னலால் வெளிச் சூழலைப் பார்க்க முடிந்தது. அங்கு தூரத்தே மக்கள் நடமாட்டம் தெரிந்தது. நாமிருக்கும் வீட்டுக்கு மக்களில் எவரும் வரமாட்டார்கள். அது புலிகளின் வீடு என்பதால் பாதுகாப்பாக இருந்தது.



**கிட்டு வந்து பார்த்தார்**

புலிகளின் தளபதியான கிட்டு தினமும் வந்து எங்களைப் பார்த்தார். கிட்டுவுடன் வந்த ரகீம் என்பவர் எங்களுடன் சிங்களத்தில் உரையாடி அதைக்

# இந்த வாரச் சொல்

## கொய்து, ஆய்ந்து

கொய்து, ஆய்ந்து ஆகிய சொற்கள் இரண்டும் கிட்டத்தட்ட ஒரே அர்த்தம் தருவன ஆயினும் வௌ;வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுகின் றன. யாழ்ப்பாணப் பேச்சு விக்கில் வினைச் சொல் லாகவே பயன்படுத்தப்படுகின்ளன. குறித்த ஒரு பகுதியை மட்டும் பிரித்து எடுப்பது, தனியாக்குவது, வேறாக்குவது, பிடுங்கி எடுப்பது ஆகிய அர்த்தங் களில் பயன்படுத்தப்பட்டாலும் வேவ்வெறு சந்தர்ப் பங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### கொய்து...

"நெற் கதிர் தண்ணீருக்குள்ள விழ முதல் கொய்து வெட்டு"

"அவள் அவசரத்தில் சீலையைக் கொய்து கட்டிக்கொண்டு ஓடிப்போறாள்"

"கத்தரியில் நோய் உள்ள இலைகளை மட்டும் கொய்து வெட்டியெடு"

"நல்லாய் முத்தின பூசனிக்காயளாய்ப் பார்த்துக் கொய்து எடுத்துக்கொண்டு போட்டாங்கள்"

"பூக் கொய்து மாலை கட்டுறதாலைதான் அவை க்கு வருமானம்"

### ஆய்ந்து

"வலையில பிடிபட்ட மீன்களை ஆய்ந்து சுத்தம் செய்தால்தான் வலையை மறுபடியும் பாவிக்கலாம்"

"மீனைக் கவனமாய் ஆய்ந்து சாப்பிடாவிட்டால் முள்ளுப் போய்விடும்"

"புளியங்காய் ஆயப் போனவன் மரத்தால விழுந்து போட்டானாம்"

கிட்டுவுக்குத் தமிழில் மொழி பெயர்த் துச் சொல்வார். வேறு சில புலித் தள பதிகளும் எம்மை வந்து பார்ப்பார் கள். அவர்களின் பெயர்கள் என்ன வென்று தெரியவில்லை.

உங்களை நாளைக்குக் கொல்லப் போகிறோம் என்று எழுதிப் பனர் அடித்திருக்கிறார்கள் என்று தமிழில் எழுதிய பனர் ஒன்றைக் கொண்டு வந்து காட்டினார்கள். எமக்கு என்ன நடக்கப்போகிறதோ என்று ஊகிக்க முடியாமலிருந்தோம்.

**பிரிக்கப்பட்டோம்**

நாங்கள் இருவரும் ஒன்றாக இருந்தால் ஏதாவது திட்டம் போட்டு செயற்பட வாய்ப்புண்டு என்ற சந்தே கத்தில் எங்கள் இருவரையும் வேறு வேறு இடங்களில் பிரித்து அடைத்து வைத்தார்கள். படைத்தரப்பு எங் களை மீட்க முயற்சிக்கிறது என்றும் அவ்வாறு அவர்கள் தம்மை நெருங் கினால் உங்களின் சடலம் தான் அவர்களுக்குக் கிடைக்கும் என்றும் கூறுவார்கள்.

என்னைப் பொறுத்தவரை எங்கோ ஓரிடத்தில் உயிருடன் இருக்கிறேன் என்று மட்டும் புரிந்தது. அவர்கள் உண்ணும் உணவுகளான பிட்டு, தோசை, ரொட்டி, சோறு ஆகியவற்றை எனக்கும் தந்தார்கள். ரெண்டு சாரங்கள், சேர்ட், துவாய் எல்லாம் தந்தார்கள். நானிருந்த பகுதியில் புலிகளின் 15பேர் வரையானவர்கள் இரவு பகலாகப் பாதுகாப்புக் கடமை யில் இருந்தார்கள்.

திடீரென வந்து எனது உடுப்பு, பொருள்கள் எல்லாவற்றையும் ஒரு பைக்குள் போட்டுக் கண்களைக் கட்டி வேறிடத்துக்கு மாற்றுவார்கள். பல தடவைகள் இவ்வாறு நடந் துள்ளது. எனது கால் காயத்துக்குப் போடப்பட்டிருந்த கட்டை வெட்டிய கற்றி அவ்வப்போது புண்ணுக்கு மருந்து கட்டுவார்கள். புலிகளின் மருத்துவப் பிரிவைச் சேர்ந்தவர்கள் நான் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு வந்து மருந்து கட்டினார் கள். அதில் எந்தவித பாரபட்சமும் காட்டமாட்டார்கள். ஆனால் அவர்க ளில் யாரும் எங்களுடன் நெருங்கிப் பழக மாட்டார்கள். நான் தடுத்து வைக் கப்பட்டிருந்த பகுதிக்கு அருகில் உலங்கு வானூர்தியின் இரைச்சல் சதத்தம் கேட்டால் பாதுகாப்புக்கு நிற்பவர்கள் கெலி கெலி எனச் சத் தம் போடுவார்கள். எப்போதும் அலேர்ட்டாகவே இருப்பார்கள்.

(மிகுதி அடுத்த வாரம் )

# ஏன்...? அப்படி...?

நட்சத்திரா

44



## சாமி தூக்குவோருக்குக் கழுத்தில் கழலை

கோவில்களில் சாமி தூக்குவது இறைபணி, தொண்டு என்று கூறித் தொடர்ச்சியாக அதில் ஈடுபடுகின்ற பலருக்குக் கழுத்தில் கழலை (திமில்) போன்றதொரு பாகம் உருவாகியிருப்பதை அவதானிக்கலாம். அவ்வாறு கழுத்தில் கழலை உண்டாகியவர்களைப் பொது வாழ்க்கையில் தொண்டன் என்று வழிப்பதைதவிட ஒரு புதினப் பொருளாகப் பார்ப்பதே வழக்கம். இவ்வாறு தோளில் கழலை உண்டாகியவர்கள் வெளிநாடு செல்லும் வேளையில் மருத்துவப் பரிசோதனை அறிக்கை பெறும்போது சிக்கல் படுகிறார்கள். இவர்களைப் பரிசோதிக்கும் சிங்கள மருத்துவர்கள் பலர் இந்தக் கழுத்துக் கழலையைக் கண்டு பயப்பிடுகின்றனர். இது ஏதோ நோய் என நினைத்து கழலைக்குள் என்ன இருக்கிறது என்று ஆராய்வதால் பலருக்கு வெளிநாடு செல்ல முடியாத நிலையும், தாமதமும் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கழலைக்குக் காரணம் தான் என்ன...?

இறந்தவர்களின் உடலைத் தோளில் காவிச் சென்று தகனம் - அடக்கம் செய்யும் வழக்கம் பழங்காலத்திலிருந்து இருந்து வருகிறது. பிணம் தூக்காத ஆண்களே இல்லை எனலாம். ஆனால் அவர்களுக்குக் கழலை ஏற்படுவதில்லை. தற்போதும் சாமி தூக்குபவர்கள் அனைவருக்கும்கூட இந்தக் கழலை ஏற்படுவதில்லை. அதிகளவில் சாமி தூக்குபவர்களில் பெரும்பாலானவர்களுக்கு ஏற்படுகிறது.

சாதாரணமாகச் சுமையைத் தோளில் தூக்கும் நேரத்தைவிட சில கோவில்களில் சாமியைத் தூக்கி அதிக நேரம் வைத்திருக்கிறார்கள். குறித்த பிரதேசதத்தில் அதிக ஆண்கள் இல்லாத நிலையில் சாமி தூக்கும் பொறுப்பிலும் கடமையிலும் அதிக கரிசனை கொண்டவர்களுக்கே இந்தக் கழலை ஏற்படுகிறது. தோளில் சாமி தூக்குபவர்கள் அதிக நேரம் தோளில் வைத்திருக்கவேண்டியிருப்பதால் பாரம் தாங்க முடியாமல் தோளுக்குப் பதிலாகக் கழுத்தின் பின்புறத்தில் பாரத்தைத் தாங்குகின்றனர். அதனால் பாரத்தால் அழுத்தப்படும் பகுதியில் அதாவது கழுத்தின் பின்புறத்தில் இந்தக் கழலைக் ஏற்படுகின்றது என்று சாமி தூக்குவதில் அனுபவமுள்ள ஆனால் கழுத்தில் கழலை இல்லாதவர்கள் கூறுகின்றனர். அதிக நேரம் தோளில் வைத்திருந்தாலும் அந்தப் பாரத்தைக் தோளுக்கும் கழுத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் தாங்கவிடாதபடி பார்த்துக்கொண்டால் இந்தக் கழலை ஏற்படாது என்கின்றனர்.

# 97

# எமையறிதல்

ஐயங்கொண்டான் சுவாமிகள்

முன்பொருமுறை பேசியதொரு விடயம் இங்கு மீள எடுக்கப்படல் அவசியமாகிறது. மனதை ஒரு நிலைப்படுத்துவது அவசியமென்பது அர்த்தமற்ற தொரு கூற்று என்று பலகோணங்களில் காரணங்களைப் பேசியிருக்கிறோமல்லவா? அப்படியாயின் மனம் ஓரிடத்திலேயே தங்கிநிற்கிறது என்று இப்போது பேசுவது முரண்பாடாக இருக்கிறதே என்று யாராவது கேட்கமுடியும். மனதை ஒருநிலைப்படுத்துவது எதிர் மனம் ஒரேயிடத்தில் தங்குவது என்றவாறாக இப்போது நிலை உள்ளது. அப்படியல்லவா? அப்படியாயின் இது அல்லது இவை என்ன?

மனதை ஒருநிலைப்படுத்துவதென்பது சிந்தனா சக்தியை இழக்காத ஒரு மனதால் சாத்தியமில்லை. முழுமையான கவனமும் குறித்த ஒரு விடயத்தினுள் குவிக்கப்படும் நிலை என்பது சாத்தியமற்றது. ஏனெனில் குறித்தவிடயம் சார்பாகவோ எதிராகவோ எமக்குள்ளிருக்கும் இருப்பு அல்லது பதிவு பட்டறிவாகவோ கருத்துருவாக்கப்பட்டதாகவோ குறித்த கணத்தில் வெளிப்படுவதைத் தவிர்க்கமுடியாது. அவ்வாறு வெளிப்படுகிறது என்றால் அங்கே மனமானது குறித்த விடயத்தைவிட வேறெதையோ நோக்கித் திரும்பியிருக்கிறது என்றுதானே அர்த்தப்படும்.

மனம் ஒரேயிடத்தில் தங்குவதென்பது குறித்த ஒரு விடயம்பற்றியதாக அடுத்து என்ன? என்கிற விதமான எந்தவொரு தீர்மானத்திற்கும் வரமுடியாத கையறுநிலை எனக்கொள்ளமுடியும். அதிலும் குறிப்பாக எதிர்மறை எண்ணப்பாட்டுடன் குறித்த விடயப் பரப்பை அதன் எல்லையைக் கடக்க முடியாதபடி அதற்குள்ளாகவே சுழலுகின்ற ஒரு தரிப்பு நிலை என்றும் கூறிக்கொள்ளலாம். இதுவே பிரமைபிடித்தல் என்பதாக அறியப்படுகிறது.

முன்கூறிய ஒருநிலைப்படுதல் எனப்படுவது வேறு ஒரேயிடத்தில் தங்குவது என்பதுவேறு. கவனம் குவிதல் எதிர் கவனம்நகராமை என்பதாகவே பேசமுடியும். இரண்டுமே சில விடயங்களில் ஒத்துப் போகமுடியும். இரண்டுமே அடுத்துஎன்ன? என்கிற இயங்குவிசையை பலமிழக்கச் செய்கின்றன. இரண்டுமே பக்கநிகழ்வுகளை உணர்ந்து செயலாற்றும் நிலையை முடக்கிவிடுகின்றன. முக்கியமாக ஒரு நிலைப்படுத்துதல் சாத்தியமற்றது என்பதுடன் ஒரு நிலையில் நிற்றல் என்பது சாத்தியமானது(இயங்குநிலை முடக்கம்) என்பதும் கவனம் கொள்ளவேண்டியவையே.

இங்கு செயற்பாட்டு முடக்கத்தை நாமே வலிந்து ஆக்கிக்கொள்வது ஒருநிலைப்படுத்துதல் என்பதாகவும் செயற்படாத முடக்கநிலை என்பதை ஒருநிலையில் நிற்றல் என்பதாகவும்கூட விளங்கிக்கொள்ள முடியும். இரண்டுமே பாதிப்புகளையே அதிகமாகத்தருவன என்பதைக் கவனத்தில் கொள்ளலாம். இததான் யதார்த்தமானதும்கூட.

மனம் இருப்பது எமக்குள்தானே. ஆக எமது செயலைச் சிந்தனைக்கான மையமான மனமே வடிவமைக்கிறது. மனதினது உறைநிலையையும் அதுவே உருவாக்குகிறது. மனம் என்கிற புலப்படா அங்கியை இயங்காதே என்று கட்டுப்படுத்தவோ இயங்கிக் கொண்டே இரு என்று கட்டுப்படுத்தவோ முடியாது. காரணம் கட்டுப்பாட்டைச் செய்யவேண்டிய பொறுப்பிலிருப்பது மனமல்லவா? அது எதை எண்ணுகிறதோ எவ்வாறெண்ணுகிறதோ அவ்வாறே தன்னை இயக்குகிறது அல்லது முடக்குகிறது. இயங்கு காலத்தை முடக்க காலத்தை அதுவே திட்டமிட்டுக்கொள்கிறது. அல்லது இடையிலேயே தன்னிலை தளம்பித் தடம்மாறுகிறது. தடுமாறுகிறது.

இவற்றுக்கெல்லாம் முடிவுதான் என்ன? என்கிற கேள்வி எழுகிறதா? நல்லது. முடிவென்பது என்ன? அப்படியானதொன்று இருக்கிறதா? அப்படியாயின் தொடக்கமென்றொன்று இருக்கவேண்டுமல்லவா? அது எங்கெயிருக்கிறது? நாம் குறித்த வியத்தில் எப்போது கவனம் செலுத்துகிறோம்? அதுதான் தொடக்கமா? கவனத்தை எப்போது கைவிடுகிறோம்? அது தான் முடிவா? எது அல்லது எவை என சிந்திக்க முடிந்திருக்கிறதா?

இங்கே மீளவும் சிந்தனையென்பது என்ன? என்றொரு வினா எழுகிறதா? அதுவும் நல்லதே. மனதினது இயக்கம்? மனதினது கவனக் குவிப்பு? கவனத் தரிப்பு? கவனவிரிவு? எதுவுமாகவோ எல்லாமாகவோ இருக்க முடியும் என்கிற யதார்த்தத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். உணர்தல் என்பது மனதினது முன்பதிவுகளின் வகைப்படுத்துதல்தான். உணர்தல் என்பதிலும் மனதினது செல்வாக்கே உள்ளது. இப்போது மனம் சம்மந்தமில்லாதென சுட்டக்கூடிய ஏதாவது இருக்கிறதா?என்கிற வினா எழுகிறதா? சிந் திப்போம்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.02.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781